புயல் நிவாரணம் தொடர்பாக பிரதமரை நேரில் சந்திக்க முடிவு

# மத்திய அரசிடம் உரிய நிதி கோரப்படும்

## முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தகவல்

புதுக்கோட்டை, நவ.20:

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் விடுபடாமல் நிவாரணம் அளிக்கும் வகையில் மத்திய அரசிடம் போதிய நிதியுதவி கோரப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.**

**ஓரிரு நாளில் பிரதமர் நரேந்திர மோடியை தான் சந்திக்க இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.**

புதுக்கோட்டையில் கஜா புயல் பாதித்த இடங்களை நேரில் ஆய்வு செய்த முதலமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியதாவது:-

கஜா புயல் வருவதற்கு முன்பாகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எங்கெங்கெல்லாம் புயல் பாதிப்பு இருக்கும் என்று தெரிந்ததோ, அங்கெல்லாம், என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக எல்லா இடத்திற்கும் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சி நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

புதுக்கோட்டையிலும், புயல் வருவதற்கு முன்பாக, மாவட்ட அமைச்சர் இங்கேயே தங்கியிருந்து அந்தப் பணிகளை எல்லாம் மேற்கொண்டார்கள். புயல் வந்த பிறகு அவர்களுக்கு உதவியாக அமைச்சர்களையும் இங்கே அனுப்பி வைத்திருக்கின்றோம். அதற்கும் 2 நாட்களுக்கு முன்பாகவே, மாவட்ட கலெக்டருக்கு உதவியாக மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்ளையும் இங்கே அனுப்பி வைத்து, அவர்களும் மாவட்ட கலெக்டரோடு இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால்தான் பாதிப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றது. இது இயற்கை சீற்றமாகையால் எப்படி வருகிறது என்று யாராலும் சொல்ல முடியாது. கஜா புயல் கோரத்தாண்டவம் ஆடிவிட்டது, கடுமையான சேதத்தை விளைவித்து விட்டது. இருந்தாலும், அரசு மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு முழு மூச்சுடன் போர்க்கால அடிப்படையில் அனைத்துப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**உரிய நிதி கோரப்படும்**

பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்த இருக்கின்றோம். அவரிடத்திலே நேரம் கேட்டிருக்கின்றோம், அநேகமாக நாளை மறுநாள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

என்னென்ன பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆதாரத்துடன் மத்திய அரசுக்கு அனுப்பிவைத்து தேவையான நிதியை பெறுவதற்கு அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.



*பட்டுக்கோட்டையை அடுத்த சூரப்பள்ளத்தில் புயலால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்பு பகுதியை முதல்வர் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டார். உடன் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள் உள்ளனர்.*

## 32 சவரன் வழிப்பறி

தாம்பரம், நவ.20:

ராயப்பேட்டையை சேர்ந்தவர் தேவி புவனேஸ்வரி - சுரேஷ் தம்பதியினர். இவர்கள், மீனம்பாக்கம் ரோட்டில் பைக்கில் வந்துகொண்டிருந்தபோது, மற்றொரு பைக்கில் வந்த ஹெல்மெட் ஆசாமிகள் தேவி அணிந்திருந்த 9 சவரன் நகையை பறித்துகொண்டு தப்பியோடினர்.

இதேபோல், சாலையில் நடந்து சென்றுக்கொண்டிருந்த பம்மலை சேர்ந்த மகாலஷ்மியிடம் 15 சவரனும், கோவிலம்பாக்கத்தை சேர்ந்த தாய் (மஞ்சுளா) - மகளிடம் (சீதா) 8 சவரன் நகையையும் பைக்கில் வந்த ஹெல்மெட் ஆசாமிகள் பறித்து சென்றுள்ளனர். இது குறித்த புகார்களின்பேரில், மீனம்பாக்கம், சிட்லப்பாக்கம் மற்றும் பல்லவாரம் போலீசார் வழக்குப்பதிந்து ஹெல்மெட் ஆசாமிகளை தேடிவருகின்றனர்.

மூன்று பேர் விடுதலையில் நடந்தது என்ன?

# அரசின் பரிந்துரையில் கவர்னருக்கு அதிருப்தி

## ஒவ்வொரு முறையும் சட்ட நிபுணரிடம் விளக்கம் கேட்பு

சென்னை, நவ.20:

**3 அதிமுகவினர் விடுதலையில் ஒவ்வொரு முறையும் அரசு அனுப்பிய பரிந்துரை கோப்புகளில் கவர்னருக்கு திருப்தி ஏற்படாததால் மீண்டும் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டது என கவர்னர் மாளிகை விளக்கம் அளித்துள்ளது.**

தர்மபுரி பஸ் எரிப்பில் விடுதலையான 3 பேர் விவகாரத்தில் கவர்னர் மாளிகை இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது வருமாறு:-

மாநில அரசு 1.2.2018 தேதியிட்ட அரசாணையில் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் விடுதலை தொடர்பான திட்டத்தை அறிவித்தது. அதன் அடிப்படையில் அரசியல் சட்டம் 161-வது பிரிவின் கீழ் 1858 ஆயுள் தண்டனை கைதிகளை விடுவிப்பதற்கு அரசு எடுத்த முடிவு கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த தருணத்தில் வழக்குகளின் தன்மை, குற்றம் செய்யப்பட்ட விதம் ஆகியவற்றை பரிசீலித்து அரசு தெரிவித்த 5 ஆண்டு சிறை தண்டனை என்பதற்கு பதிலாக குறைந்தபட்சம் 10 ஆண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்களை விடுவிக்கலாம் என உத்தரவை மாற்றி ராஜ்பவன் 3.5.2018 அன்று அரசுக்கு அனுப்பியது.

ஆயுள் தண்டனை கைதிகள் ஒவ்வொருவரின் கோப்புகளும் கூடுதல் டிஜிபி (சிறைத்துறை) தலைமையிலான குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டது. இந்த பரிந்துரையை தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், சட்டத்துறை செயலாளர் ஆகியோரைக்கொண்ட குழு ஏற்று அதன் பின்னர் சட்ட அமைச்சர் மற்றும் முதலமைச்சரால் ஒப்புதல் அனுப்பப்பட்டு ராஜ்பவனுக்கு அனுப்பப்பட்டது. 1627 ஆயுள் தண்டனை கைதிகளை அரசியல் சட்டம் 161-வது பிரிவின் கீழ் விடுவிப்பதற்கு உரிய நடைமுறைகளை பின்பற்றி உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மனுக்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை மற்றும் 3 அப்பாவி மாணவிகள் கொல்லப்பட்டது, பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்தது ஆகியவை தொடர்பாக உச்சநீதிமன்றம் 11.3.2016-ல் தெரிவித்த கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஒவ்வொரு முறையும் மாநில அரசு அனுப்பிய கோப்புகள் கவர்னருக்கு திருப்தி அளிக்காததால் திருப்பி அனுப்பப்பட்டது.

மனுதாரர்கள் உள்ளிட்ட கும்பலுக்கு அரசியல் தலைவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது என்றும், இதற்காக பொது சொத்துக்கு சேதம் விளைவிக்க நினைத்தனர் என்றும், உயிரிழந்த 3 மாணவிகளை கொல்ல வேண்டும் என்று திட்டமிடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## விசாரணை அறிக்கை வெளியானது எப்படி? தலைமை நீதிபதி கேள்வி

புதுடெல்லி, நவ.20:

சிபிஐ இயக்குனர் மற்றும் சிறப்பு இயக்குனர் மீதான லஞ்ச ஒழிப்பு துறையின் விசாரணை அறிக்கை ஊடகங்களுக்கு கசிந்தது எப்படி என்பது குறித்து உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சீல் வைக்கப்பட்ட கவரில் தாக்கல் செய்யப்பட்ட இந்த அறிக்கை ஊடகங்களில் வெளியானதற்கு கண்டனம் தெரிவித்த தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் விசாரணையை உடனடியாக தள்ளி வைத்தார்.

சிபிஐ இயக்குனர் அலோக் வர்மா, சிறப்பு இயக்குனர் ரகேஷ் அஸ்தானா ஆகியோர் ஒருவர் மீது மற்றொருவர் லஞ்சப்புகார் கூறியதை தொடர்ந்து இருவரும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். குஜராத் மற்றும் ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் மீதான புகார்கள் பற்றிய விசாரணையில் லஞ்சம் பெற்றதாக புகார் கூறப்பட்டு உள்ளது. இந்நிலையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது சீலிடப்பட்ட கவரில் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை வெளியானது



*கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டத்திற்கு தமிழக பிஜேபி சார்பில் அளிக்கப்பட்ட நிவாரண பொருட்களை மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று அனுப்பி வைத்தார்.*



*யோகா பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தி அண்ணாநகர் சித்த மருத்துவமனையில் ஏராளமானோர் மண் குளியல் நடத்திய காட்சி.*

## திருத்துறைப்பூண்டி: பொன்னார் ஆய்வு

திருத்துறைப்பூண்டி, நவ.20:

கஜா புயலால் பாதிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டியில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் இன்று ஆய்வு செய்தார்.

இதன் பின்னர் அவர் அளித்த பேட்டியில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தென்னை மரங்கள் சாய்ந்து கிடப்பதாகவும், சேதம் பற்றிய விவரம் உள்துறைக்கு உடனடியாக தெரிவிக்கப்படும் என்றும் கூறினார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

பிறகு புயலால் பாதிக்கப்பட்டு அங்குள்ள பிறவி மருந்தீஸ்வரர் கோவிலில் தங்க வைக்கப்பட்டு இருந்த பொதுமக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இதையடுத்து பொன்.ராதா கிருஷ்ணன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கஜா புயலால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விவசாய நிலங்கள் குறிப்பாக தென்னை மரங்கள் மொத்தமாக சாய்ந்துள்ளது.

நெற்பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குடிசை வீடுகளும் சேதமாகி உள்ளது. சேதமான வீடுகளை சீரமைக்கும் வரை இந்த மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குடிநீர், உணவு, மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

கஜா புயல் பாதிப்பு குறித்து மத்திய உள்துறைக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகத்தில் புகை பிடிக்க உடனடி தடை

பெங்களூரு, நவ.20:

**கர்நாடகா மாநிலம் முழுவதும் புகைப் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையுத்தரவு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.**

கர்நாடகத்தில் புகையிலை பொருட்கள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது குறித்து பெங்களூருவில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்துக்கு பின்னர் நகர மேம்பாட்டு துறை அமைச்சர் யு.டி.காதர் நிருபர்களிடம் கூறியதாவது:-

கர்நாடகத்தில் பொது இடங்களில் புகைப்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. மாநிலம் முழுவதும் புகையிலை பொருட்கள் பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் புகைப்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளதாக ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பப்பட்டு உள்ளது. அதில் உள்ள அம்சங்களை மதுபான விடுதி, உணவகம், கேளிக்கை விடுதிகளின் உரிமையாளர்கள் முறையாக பின்பற்ற வேண்டும். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பெங்களூரு மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மதுபான விடுதி, உணவகங்கள் மற்றும் கேளிக்கை விடுதிகளில் ஏற்கனவே புகைப்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த உத்தரவு உடனடியாக மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்படுகிறது.

விமான நிலையங்களில் வரி இல்லாத கடைகளில் மதுபானம் மற்றும் புகையிலை பொருட்கள் விற்பனையை தடை செய்வது தொடர்பாக மத்திய அரசுக்கு கடிதம் எழுத முடிவு செய்யப்பட்டு உள்ளது. புகையிலை பொருட்கள், மதுபானம் மீதான வரி சலுகையை திரும்ப பெற அரசு ஆலோசித்து முடிவு எடுக்க இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## அனைவருக்கும் நிவாரணம்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

செயல்பட்டனர். இங்கே இருக்கும் எதிர்க்கட்சிகளிடம் அது போன்ற மனப்பாங்கு இல்லை, துன்பமான இந்த நேரத்தில் அவர்களுக்கு உதவிகள் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அனைத்துத் தரப்பு மக்களையும் கேட்டுக் கொள்கின்றேன். வித்தியாசம் பாராமல், கட்சி பாகுபாடு இல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய வேண்டுமென்று அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். அதேபோல, இந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வருகின்ற அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அப்பொழுதுதான், வேகமாக, துரிதமாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியும். அதில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால், அந்தப் பணியில் சுணக்கம் ஏற்படும். ஆகவே, பொதுமக்களும், அங்கு பணிசெய்கின்ற அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டீ குடித்த போது போலீஸ் பைக்கிலேயே தப்பியவன்

# ரவுடி பல்சர் பாபு நள்ளிரவில் சிக்கினான்

## பெருங்களத்தூரில் போலீஸ் சுற்றி வளைத்தது

சென்னை, நவ.20:

**உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, காவலரின் பைக்கிலேயே தப்பியோடி தலைமறைவான கைதி பல்சர் பாபுவை போலீசார் நேற்றிரவு பெருங்களத்தூரில் கைது செய்தனர்.**

காசிமேடை சேர்ந்தவர் பாபு (என்கிற) பல்சர் பாபு (வயது 27). இவர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. இதனிடையே, வழக்கு ஒன்றில் வேப்பேரி போலீசாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாபுவிற்கு கடந்த அக்டோபர் 14-ம் தேதி திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, ஸ்டான்லி மருத்துவமனைக்கு போலீசாரின் காவலுடன் பாபு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். அப்போது, தலைவலிப்பதாக கூறிய பாபு, டீ குடிக்க தன்னை வெளியே அழைத்துசெல்லுமாறு கேட்டுள்ளார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, போலீசாரின் பைக்கிலேயே பாபு தப்பியோடி தலைமறைவானார். இது குறித்து, பூந்தமல்லி உதவி கமிஷனர் செம்பேடு பாபு தலைமையிலான தனிப்படை போலீசார் வழக்குப்பதிந்து பாபுவை தேடிவந்தனர். இந்த நிலையில், பெருங்களத்தூரில் உள்ள வீட்டில் பாபு பதுங்கியிருப்பதாக போலீசாருக்கு நேற்றிரவு தகவல் கிடைத்துள்ளது. இதனடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், அங்கு பதுங்கியிருந்த பாபுவை சுற்றிவளைத்து கைது செய்தனர்.

## 500 கிலோ குட்கா பறிமுதல்: மளிகை கடைக்காரர் கைது

சென்னை, நவ.20:

குட்கா விற்பனையில் ஈடுபட்ட மளிகை கடைக்காரரை கைதுசெய்த போலீசார் அவரது குடோனில் பதுக்கிவைக்கப்பட்டு இருந்த 500 கிலோ குட்காவையும் பறிமுதல் செய்தனர்.

மதுரவாயல் அடுத்த வானகரத்தை சேர்ந்தவர் ஜேசுராஜ் (வயது 50). இவர், அதே பகுதியில், மளிகை கடை நடத்திவருகிறார். இவரது கடையில் குட்காவை பதுக்கிவைத்து விற்பனை செய்துவருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதன்பேரில், சம்பவ இடத்திற்கு சென்று போலீசார் ஆய்வு நடத்தினர். அப்போது, கடை அருகே ரூம் ங.இஒன்றை வாடகைக்கு எடுத்து குடோன் அமைத்து குட்காவை பதுக்கிவைத்துள்ளது கண்டுப்பிடிக்கப்பட்டது. இங்கிருந்து, மற்ற இடங்களுக்கு குட்கா சப்ளை செய்வதாக ஒப்புக்கொண்டதையடுத்து, ஜேசுராஜை போலீசார் கைது செய்தனர். அவரது குடோனில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 500 கிலோ குட்காவும் பறிமுதல் செய்யப்பட்டது. இது குறித்து மதுரவாயல் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்திவருகின்றனர்.

## பீர்பாட்டிலுடன் பட போஸ்டர்

## விஷாலுக்கு ராமதாஸ் கண்டனம்

சென்னை, நவ.20

**விஷால் நடித்துள்ள அயோக்யா பட போஸ்டரில் பீர் பாட்டிலுடன் விஷால் உள்ள காட்சி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு பாமக நிறுவனர் ராமதாஸ் விஷாலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து இன்று அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அயோக்யா திரைப்பட விளம்பரத்தில் கதாநாயகன் விஷால் பீர்பாட்டிலுடன் தோன்றுகிறார். நடிகர் சங்க பொதுச்செயலாளர் என்ற முறையில் புகைக்கும் காட்சிகளில் நடிகர்கள் நடிப்பதை தடை செய்ய வேண்டும் என கடிதம் எழுதினேன். இப்போது புகையை தாண்டி பீர் பாட்டிலுடன் நடிக்கிறார். என்ன ஒரு சமூக பொறுப்பு. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.**

## கவர்னர் மாளிகை விளக்கம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவை யொட்டி அரசால் விதிக்கப்பட்ட வழிகாட்டுதலின் கீழ் 3 பேரும் வருவதாக அட்வகேட் ஜெனரல் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த 3 பேரையும் முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு அட்வகேட் ஜெனரல் தெரிவித்த கருத்தை அரசு ஏற்று பின்னர் அது தொடர்பான கோப்புகளில் சட்டத்துறை செயலாளர், உள்துறை செயலாளர், சட்ட அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் பரிந்துரைத்திருந்தனர்.

இந்த கோப்புகள் 3-வது முறையாக 12.11.2018 அன்று கவர்னரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அவர் திருப்தி அடையவில்லை.

மேலும் 3 ஆயுள் தண்டனை கைதிகளையும் உள்ளூர் சமுதாயம் எந்த தயக்கமும் இன்றி ஏற்றுக்கொள்ளும் என்றும், ஆத்திரம் கொண்ட கும்பலால் வன்முறை நடந்து மரணம் நேர்ந்து விட்டது என உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்து இருந்தது என்பது போன்றவற்றையும் 3 பேரும் 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டார்கள் என்ற அடிப்படையிலும் அரசியல் சட்டத்தின் 161-வது பிரிவின் கீழ் முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டது. இவ்வாறு கவர்னரின் இணை இயக்குனர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## கஞ்சா விற்ற 3 பேர் கைது

செங்குன்றம், நவ.20:

செங்குன்றம் பாடிய நல்லூர் பகுதியில் கஞ்சா விற்பனை நடப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் வந்ததையடுத்து இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், சப் இன்ஸ்பெக்டர் பலராமன் பாடியநல்லூர் பகுதியில் கஞ்சா விற்பவர்களை பிடிக்க சென்றபோது விளையாட்டு மைதானம் அருகே இருந்த 3 பேர் ஓட முயற்சி செய்தனர். அவர்களை மடக்கி பிடித்து விசாரித்த போது நல்லூர் அம்பேத்கர் நகரை சேர்ந்த வெற்றி என்ற வெற்றிவேல் (வயது 34), கானாத்தூர் சாகுல் அமீது (வயது 38), கும்மிடிப்பூண்டி அசோக்குமார் (வயது 46) ஆகியோரும் கஞ்சா பொட்டலம் விற்றது தெரிய வந்தது. இவர்களிடம் இருந்து 1 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர்.


TTL தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட்

(டிசிஐஎல், இந்திய அரசு நிறுவனம் மற்றும் டிட்கோ, தமிழ்நாடு அரசு நிறுவனத்துடனான கூட்டு நிறுவனம்)

பதிவு அலுவலகம்: எண்.16, முதல் தளம், அஜீஸ் முல்க் 3-வது தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006

CIN: L32201TN1988PLC015705, தொலைபேசி: 044-28292653, இ-மெயில்: ttlcosec@rediffmail.com, இணையதளம்: www.ttlofc.in

30.09.2018 அன்றுடன் முடிந்த அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூபாய் நூறுகளில்)

| விவரங்கள் | முடிந்த அரையாண்டு 30.09.2018 (த.ஆகாதது) | முடிந்த அரையாண்டு 30.09.2017 (த.ஆகாதது) | முடிந்த ஆண்டு 31.03.2018 (த. ஆனது) |
|---|---|---|---|
| செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | - | 160,689 | 160,689 |
| நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | (761,494) | (696,406) | (1,438,379) |
| வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (761,494) | (698,561) | (1,440,534) |
| வரிக்கு பிந்தைய நடப்பு காலத்துக்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (761,494) | (698,561) | (1,440,534) |
| நடப்பு காலத்துக்கான மொத்த விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது மற்றும் இதர விரிவான வருவாய்) (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது) | (761,494) | (698,561) | (1,419,984) |
| சம பங்கு மூலதனம் | 4,567,620 | 4,567,620 | 4,567,620 |
| ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வு நீங்கலானது) | (13,957,893) | (12,470,425) | (13,196,400) |
| பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) ரூபாயில் | | | |
| 1. அடிப்படை : | (1.67) | (1.53) | (3.15) |
| 2. திட்பம் குறைந்தது: | (1.67) | (1.53) | (3.15) |

குறிப்புகள்:

1) Ind AS-34 விதிமுறைகளின்படி Ind AS விதிமுறைகளை பின்பற்றி 30.09.2017 அன்றுடன் முடிந்த இணையான அரையாண்டுக்கான இடைக்கால தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 133-வது பிரிவின் கீழும், இதர பொருத்தமான விதிமுறைகளின் கீழும், இந்தியாவில் பொதுவாக ஏற்கப்பட்டுள்ள இதர கணக்கியல் நெறியீட்டு முறைகளின் படியும், ''இடைக்கால நிதிநிலை அறிக்கை'' தயாரிக்கப்பட்டுள்ளது. SEBI சுற்றறிக்கை எண்.CIR/CFD/FAC/62/2016 தேதி: 05.07.2016 படி Ind AS விதிமுறைகளை பின்பற்றி இணையான காலாண்டுக்கான இடைக்கால தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

2) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டு / வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழு படிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களான நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் (www.nseindia.com) இணைய தளத்திலும், BSE லிமிடெட் நிறுவனத்தின் (www.bseindia.com) இணைய தளத்திலும் மற்றும் கம்பெனியின் (www.ttlofc.in) இணையதளத்திலும் காணலாம்.

இயக்குனர்கள் குழுவுக்காகவும் அதன் சார்பாகவும்

சஞ்சீவ் குமார் கேசரி

நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை

தேதி : 19.11.2018